சிறப்பு அலங்காரத்தில்...

வைகாசி விசாகத் திருவிழாவையொட்டி
தருமபுரி குமாரசாமிப்பேட்டை சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் சனிக்கிழமை சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்த சுவாமி.

ஜூன் 2, 3–இல் முதியோருக்கான அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம்

கிருஷ்ணகிரி, மே 30: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜூன் 2, 3 ஆகிய தேதிகளில் முதியோருக்கான அத்தியாவசியப் பொருள்கள் இல்லம்தேடி விநியோகம் செய்யப்படும் என்று மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது:

தமிழக அரசு முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களது இல்லம்தேடி அத்தியாவசியப் பொருள்களை வழங்கி வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 30,963 பயனாளிகளின் குடும்ப அட்டைகளுக்கு தாயுமானவர் திட்டத்தின் கீழ் மொத்தம் 309 குழுக்கள் அமைக்கப்பட்டு, 463 வாகனங்கள் மூலம் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஜூன் 2, 3 ஆகிய தேதிகளில் பயனாளிகளின் இல்லங்களில் அத்தியாவசியப் பொருள்கள் விநியோகம் செய்யப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

VISTAAR FINANCE

விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிட்.
பதிவு அலுவலகம்: மனை எண் 59 & 60 – 23, 22ஆவது குறுக்கு, 29ஆவது மெயின் BTM லேஅவுட் 2ஆவது கட்டம், பெங்களூரு – 560076. www.vistaarfinance.com

இணைப்பு IV [பார்க்க விதி – 8(1)]

சுவாதீன அறிவிப்பு (அசையாச் சொத்துக்கானது)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் **விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெடின்** அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கிறபடியால், கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை ஆமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(12)–இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3–இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் **01.08.2026 நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினைக்** கடன்தாரர்(கள்) **திரு/திருமதி அனிச்சந்திரன் மாதய்யன், திரு/திருமதி பிரியா G,** இருவரது முகவரி: கதவு எண் 2 268, சவஸூர், செம்படமுத்தூர் அஞ்சல், கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி, தமிழ்நாடு 635122. **இன்னொரு முகவரி:** கல்கோபசந்திரம் பேருந்து நிறுத்தம், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி, தமிழ்நாடு, கிருஷ்ணகிரி –635122 ஆகியோருக்கு அனுப்பிக் கடன் கணக்கு **எண் 0263SBML00372–இன்படி** அதில் குறிப்பிட்டுள்ள 01.01.2026 நாள்படியான **ரூ.21,24,202/– (ரூபாய் இருபத்தொரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து இருநூற்று இரண்டு மட்டும்)** தொகையை, தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள் முதலானவற்றுடன் அவ்வறிவிப்புக் கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்(கள்) அத்தொகையைச் செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (4) மற்றும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8–இன் கீழ் உள்ள தன் உரிமைகளைப் பயன்படுத்தி **26.05.2026** அன்று கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை அடையாள சுவாதீனம் எடுத்துக் கொண்டுள்ளார்.

எனவே கடன்தாரருக்கு / கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைத்துக் கொள்ள வேண்டாம். மீறினால் அது **விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெடுக்கு 01.01.2026** நாள்படி **ரூ.21,24,202/– (ரூபாய் இருபத்தொரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து இருநூற்று இரண்டு மட்டும்)** தொகையை, தொகை செலுத்தப்படும் நாள் வரையிலான எதிர்கால வட்டி மற்றும் இதர கட்டணங்கள் முதலானவற்றுடன் சேர்த்துச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)–இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரருக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.

அசையாச் சொத்து விவரம்:

ஏக்கர் 0.27ல் சென்ட் பரப்பளவு கொண்ட சொத்து. சர்வே எண்கள்: **139/6A.** இது கோலியம் கிராமத்தில் அமைந்துள்ளது. இது கிருஷ்ணகிரி IIஆம் இணை சார்பதிவு மாவட்டத்துக்கு உட்பட்டது. **எல்லைகள் பின்வருமாறு:** வடக்கு: கோவிந்தன் சொத்து, தெற்கு: குப்புசாமி சொத்து, கிழக்கு: குன்று, மேற்கு: குமார்த்தி சொத்து.

நாள்: 26.05.2026
இடம்: கிருஷ்ணகிரி

ஒம்/– அதிகாரப்பூர்வ அலுவலர்,
விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்

தொப்பூர் கணவாய் பகுதியில்

விபத்துகளை கட்டுப்படுத்த சாலையில் சிவப்பு கட்டங்கள்

தருமபுரி, மே 30: தருமபுரி மாவட்டம், தொப்பூர் கணவாய் பகுதியில் தொடர் விபத்துகளைத் தடுக்கும் வகையில், ஆபத்தான வளைவுகள் மற்றும் சரிவான சாலைப் பகுதிகளில் சிவப்பு நிறத்தில் கட்டம் வரைந்து வாகன ஓட்டிகளுக்கு நெடுஞ்சாலைத் துறை சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

காஷ்மீரில் இருந்து கன்னியாகுமரி வரை செல்லும் முக்கிய சாலையாக தருமபுரி மாவட்டம், தொப்பூர் கணவாய் சாலை உள்ளது. தொப்பூர் கட்ட மேட்டில் இருந்து தொப்பூர் இரட்டை பாலம் வரை சாலை தாழ்வாகவும், அதிக இடங்களில் வளைவாகவும் உள்ளதால் தொடர்ந்து விபத்துகள் ஏற்பட்டு, உயிரிழப்பும் அதிகரித்து வந்தது. குறிப்பாக இப்பகுதியில் நேரிட்ட விபத்துகளில் 420 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 1,000- க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். எனவே, இப்பகுதி அதிக விபத்துகள் நடக்கும் பகுதியாக (பிளாக் ஸ்பாட்) அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் விபத்துகளைத் தடுக்கும் வகையில், ஆபத்தான வளைவுகள் இல்லாத வகையில் உயர்மட்ட பாலம் அமைக்கக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து தொப்பூர் கணவாய் பகுதியில் ரூ. 905 கோடியில் 6.60 கி.மீ. நீளத்துக்கு, உயர்மட்ட பாலம் அமைக்க மத்திய அரசு அனுமதித்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தொப்பூர் கணவாய் பகுதியில் அதிக அளவில் விபத்துகள் நடக்கும் பகுதியில் சாலையில் சிவப்பு வண்ணத்தில் வரையப்பட்டுள்ள கட்டங்கள்.

கடந்தாண்டு உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி தொடங்கி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்காக 83 ராட்சத தூண்கள் அமைக்கப்படுகின்றன. உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி நடைபெறுவதையொட்டி, தருமபுரி மாவட்டம், வெள்ளக்கல் பகுதியிலிருந்து தொப்பூர் மேச்சேரி சாலை வரை, பழைய சாலையைவிட்டு அருகில் புதிதாக இணைப்புச்சாலை அமைக்கப்பட்டு, அதில் போக்குவரத்து நடைபெற்று வருகின்றன.

ஏற்கெனவே விபத்துகள் நடக்கும் பகுதி, தற்போது உயர்மட்ட பாலப் பணிகள் நடந்து வருவதால், மேலும் விபத்துகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்பதால் இப்பகுதியில் அதிகபட்சமாக மணிக்கு 30 கி.மீ. வேகத்துக்கும் மேலாக வாகனங்களை இயக்கக் கூடாது என போலீஸார் கட்டுப்பாடு விதித்துள்ளனர். எனவே, வாகன ஓட்டிகள் எச்சரிக்கையாக வாகனங்களை இயக்கும் வகையில் 35 இடங்களில் பிரதிபலிக்கும் மின்விளக்குகள் (பிளிங்கர் லைட்ஸ் மற்றும் எல்இடி லைட்) அமைக்கப்பட்டுள்ளன. மேலும், போலீஸார் ஒலிபெருக்கி மூலம் தொடர்ந்து எச்சரிக்கை விடுத்தும் வருகின்றனர்.

இவை எல்லாவற்றையும் மீறி வாகனங்களை வேகமாக இயக்குவதால், இப்பகுதியில் விபத்துகள் நடப்பதும், உயிரிழப்புகளும் தொடர்ந்து வருகின்றன.

ரெட் அலர்ட் விழிப்புணர்வு :

தொப்பூர் கணவாய் பகுதியில் ஆஞ்சனேயர் கோயில் அருகே, நெடுஞ்சாலைத் துறை சார்பில், ஆபத்தான பகுதி (ரெட் ஜோன்) என்பதை வாகன ஓட்டிகளுக்கு எச்சரிக்கும் விதமாக சாலையில், மேஜை அளவுக்கு சிவப்பு நிறத்தில் 600 மீட்டர் தொலைவுக்கு கட்டங்கள் வரையப்பட்டுள்ளன. அவற்றின் நடு நடுவில் மஞ்சள் நிறத்தில் 30 கி.மீ. வேகத்திற்குள்தான் வாகனங்களை இயக்க வேண்டும் என அறிவுறுத்தும் வகையில் இரவில் ஒளிரும் விதமாக வரையப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறையினரின் இந்த முயற்சிக்கு வரவேற்பு கிடைத்துள்ளது.

வாகன ஓட்டிகள் சிவப்பு கட்டங்களைக் கண்டதும், விபத்து பகுதி என்பதை உணர்ந்து வாகனங்களை குறிப்பிட்ட வேகத்தில் இயக்கி வருவதாக போலீஸார் தெரிவித்துள்ளனர். இவற்றையெல்லாம் மீறி வாகனங்களை வேகமாக இயக்கினால் போலீஸார் மற்றும் வட்டார போக்குவரத்துத் துறை சார்பில், அபராதம் விதிப்பு உள்ளிட்ட சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுபாட்டிலால் தாக்கப்பட்டதில் கட்டட மேஸ்திரி காயம்

பென்னாகரம், மே 30: பென்னாகரம் அருகே மதுபானக் கடை பகுதியில் ஏற்பட்ட தகராறில் மதுபாட்டிலால் தாக்கியதில் படுகாயமடைந்த கட்டட மேஸ்திரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பென்னாகரம் அருகே எர்ரபையனஅள்ளி பகுதியைச் சேர்ந்த மாதப்பன் மகன் அம்பேத்குமார் (47). கட்டட மேஸ்திரி. இவரும், உடன் வேலை செய்பவருமான கூத்தப்பாடி பகுதியைச் சேர்ந்த குமாரும் (35) பென்னாகரம் அருகே ஜக்கம்பட்டி பகுதியில் உள்ள அரசு மதுபானக் கடைக்கு சென்றுள்ளனர். அங்கு இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் குமார் மதுபாட்டிலால் அம்பேத்குமாரை தலையில் அடித்துள்ளார். இதில் படுகாயமடைந்த அம்பேத்குமாரை அக்கம் பக்கத்தினர் மீட்டு பென்னாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் அம்பேத்குமார் அளித்த புகாரின் பேரில் ஒகேனக்கல் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பொது அறிவிப்பு

தமிழ்நாடு மாநிலம், தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், கோணங்கிஅள்ளி அஞ்சல், அரிச்சந்தரனூர் க.எண்.5/28–1 என்ற முகவரியில் வசிக்கும் **திரு.தமிழ்செல்வன் மனைவி திருமதி. கார்த்திகா** ஆகிய எமது கட்சிக்காரர் வழங்கியுள்ள தகவலின் பேரில் வழங்கும் பொது அறிவிப்பு யாதெனில், மேற்படி எமது கட்சிக்காரருக்கு பாத்தியப்பட்ட உங்களரானஅள்ளி கிராம ச.எண்.119/3, இதன் ரி.ச.எண்.119/3M–ல் சதுரடிக்கு 1794 க்கு சம்பந்தப்பட்ட (தாய் பத்திரம்) கிரய ஆவண எண்.1986/2004 தேதி.20.09.2004, தருமபுரி 2 இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்ட, மேற்படி ஆவணம் தொலைந்தவிட்ட காரணத்தினால் எமது கட்சிக்காரர் தமிழ்நாடு காவல் துறை இணையப் புகார் பிரிவில் விவர எண்.**01LC5872600024087 dated 30.05.2026**–ம் தேதி புகார் அளித்து அதற்கான ஒப்பிகையும் பெற்றுள்ளார். எனவே மேற்படி எமது கட்சிக்காரர் குறிப்பிட்ட மேற்படி நிலத்திற்கு சம்பந்தப்பட்ட மேற்படி ஆவணத்தை யாரேனும், எங்கேனும் கண்டெடுத்தால் உடன் எமது கட்சிக்காரர்க்கோ அல்லது எனக்கோ இந்த அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து தெரிவிக்க வேண்டும். தவறினால் மேற்படி தொலைந்துவிட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகலை எதிர்வரும் சொத்து பரிமாற்றங்கள் உள்ளிட்ட விற்பனை, தானம், அடைமானம் ஆகியவற்றிக்கு அலவாக கருதி பயன்படுத்த உள்ளார் என்பதை அறியவும், அதன்பின் வரும் எந்த கோருரிமையும் ஏற்கப்படமாட்டாது என்பதை அறியவும்.

மு.பிரபு BE, LLB.,
வழக்கறிஞர், தருமபுரி
அலைபேசி எண். 9092820012

தேதி : 30.05.2026
இடம் : தருமபுரி

கடத்தல் வழக்குகளில் கைப்பற்றப்பட்ட 5 வாகனங்களை ஏலம் விட முடிவு

உரிமையாளர்கள் உரிமை கோர அழைப்பு

தருமபுரி, மே 30: தருமபுரி மாவட்டத்தில் ரேஷன் பொருள்களை கடத்திய வழக்கில் கைப்பற்றப்பட்ட 5 வாகனங்கள் பொது ஏலத்தில் விடப்படவுள்ளன. எனவே வாகன உரிமையாளர்கள் அசல் ஆவணங்களுடன் ஆஜராகி உரிமை கோரலாம் என அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர் ரெ. சதீஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, பாலக்கோடு, பென்னாகரம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, காரிமங்கலம், நல்லம்பள்ளி ஆகிய வட்டங்களில் ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை முறைகேடாக கடத்திச் சென்று விற்பனை செய்ய பயன்படுத்தப்பட்ட 1 இருசக்கர வாகனம் மற்றும் 4 நான்கு சக்கர வாகனங்கள் என மொத்தம் 5 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, வழக்குப் பதிவுசெய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த வாகனங்கள் தொடர்பாக இதுவரை யாரும் உரிமை கோரவில்லை. எனவே, அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில், அவற்றை பொது ஏலத்தில்விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட 5 வாகனங்களையும் மின் ஆளுமை மூலம் பொது ஏலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், யாரேனும் இந்த வாகனங்கள் தங்களுடையது என கருதி மீட்க விரும்பினால், வாகனம் தொடர்பான அனைத்து அசல் ஆவணங்களுடன், அறிவிப்பு வெளியானதில் இருந்து 10 நாள்களுக்குள் தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலரை அணுகி உரிமை கோரலாம் எனத் தெரிவித்துள்ளார்.

சிறுவனை தாக்கி 'ரீல்ஸ்' வெளியிட்ட 5 சிறுவர்கள் மீது போலீஸார் வழக்குப் பதிவு

தருமபுரி, மே 30: தருமபுரி அருகே சிறுவனை தாக்கி, சமூக வலைதளங்களில் 'ரீல்ஸ்' வெளியிட்ட சிறுவர்கள் மீது போலீஸார் வழக்குப் பதிவுசெய்துள்ளனர்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியத்துக்கு உள்பட்ட ஒரு கிராமத்தைச் சேர்ந்த 16 வயது சிறுவன் வீட்டில் தனியாக வசித்து வருகிறார். சிறுவனின் பெற்றோர் கோவையில் தங்கி வேலை பார்த்து வரும் நிலையில், அவ்வப்போது ஊருக்கு வந்துசெல்வது வழக்கம்.

இந்நிலையில், அதே பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய 5 சிறுவர்கள் கடந்த 27–ஆம் தேதி, குறிப்பிட்ட அந்த 16 வயது சிறுவனின் வீட்டுக்கு சென்றுள்ளனர். சிறுவர்களுக்குள் ஏதோ தகராறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து வீட்டில் தனியாக இருந்த 16 வயதுச் சிறுவனை, 5 சிறுவர்களும் சேர்ந்து தாக்கியுள்ளனர். இந்த சம்பவத்தை கைப்பேசியில் விடியோவாகப் பதிவுசெய்துள்ளனர்.

பின்னர், அந்த விடியோவை அந்த சிறுவர்கள் சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்து பரப்பியுள்ளனர். உறவினர்கள் மூலம் இதுகுறித்த தகவலறிந்த 16 வயதுச் சிறுவனின் பெற்றோர், இந்த சம்பவம் தொடர்பாக தொப்பூர் காவல் நிலையத்தில் மே 29 ஆம் தேதி புகார் அளித்தனர். இதுதொடர்பாக போலீஸார் நடத்திய விசாரணையில், 16 வயதுச் சிறுவன் மே 26 ஆம் தேதி அவரது தாய் ஊருக்கு வந்திருந்தபோது, அவரை இருசக்கர வாகனத்தில் ஏற்றிச் சென்றபோது, குறிப்பிட்ட இந்த சிறுவர்களில் சிலர் மீது மோதுவது போலசென்றாராம்.

இதனால் ஆத்திரமடைந்த சிறுவர்கள் மறுநாள் அவரது வீடு தேடிச்சென்று அந்த சிறுவனைத் தாக்கியுள்ளனர். இதை விடியோ எடுத்து வெளியிட்ட 5 சிறுவர்கள் மீதும் இளஞ்சிறார்கள் சட்டப் பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
सेन्ट्रल बैंक ऑफ़ इंडिया
Central Bank of India
CENTRAL TO YOU SINCE 1911
மண்டல அலுவலகம் : 14/15, வெரைட்டி ஹால் ரோடு, கோவை - 641 001

மாபெரும் மின்னணு ஏல அறிவிப்பு
(E-Auction Notice)
(SARFAESI சட்டம் 2002–ன் கீழ்)

SARFAESI சட்டம் 2002, மற்றும் அதன் பிரிவு 13 (4) ன் கீழ் அதிகாரம் பெற்ற சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா வங்கி அதிகாரி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் சொத்துக்களை கீழ்க்கண்ட தேதிகளில் சுவாதீனம் எடுத்திருந்தார், இதனைத்தொடர்ந்து கீழ்க்கண்ட தேதிகளில் மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(2)ன் கீழ் பின்வரும் கடன் கணக்குகளில் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு வர வேண்டிய கடன் நிலுவைத் தொகைகளை வட்டியுடன் வசூலிக்கும் விதமாக பட்டியலில் கண்டுள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையுடன் கூடிய கேப்பு அறிவிப்பினை அனுப்பியிருந்தார். ஆனால் கடன்தாரர் / உத்தரவாதம் அளித்தவர் / அடமானம் வைத்தவர் கடன் நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்த தவறியதால், இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரி மேலே குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவு 13 (4) (a) மற்றும் விதி 8 மற்றும் 9 ன் கீழ், தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் வங்கிக்கு வர வேண்டிய நிலுவைத் தொகைகளை வசூல் செய்திட உள்ளார். இதன்கீழ் கையொப்பமிட்ட அதிகாரியின் மூலமாக https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மின்னணு ஏல முறையில் விற்பனை நடைபெறும்.

கிளை : ஓசூர் கிளை. கடன் கணக்கின் பெயர் : கடன் பெற்றவர் : M/s.சுபா கார்மென்ட்ஸ், பிரதிநிதியாக அதன் உரிமையாளர் : திரு.M.M.கோபி, பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : 50/8A1, லக் இந்தியா, ராய்கோட்டை சாலை, ஓசூர். **தற்போதைய யூனிட் முகவரி :** 136/1, முதல் தளம், எண்.4, சாந்தி நகர் கிழக்கு, இன்னர் ரிங் சாலை, ஓசூர் - 635109. **உரிமையாளர் திரு.M.M.கோபி, த/பெ.M.K.மாதைய்யா செட்டி அவர்களின் குடியிருப்பு முகவரி :** கதவு எண். 3/157B, மாட்லாம்பட்டி கிராமம், பைசுஹள்ளி மஜரா, காரிமங்கலம் தாலுக்கா, தர்மபுரி மாவட்டம், தமிழ்நாடு - 635111. **உத்தரவாதம் அளித்தவர் : திரு.M.M.ராஜா, த/பெ.M.K.மாதைய்யா செட்டி,** கதவு எண். 3/142, மாட்லாம்பட்டி கிராமம், பைசுஹள்ளி மஜரா, காரிமங்கலம் தாலுக்கா, தர்மபுரி மாவட்டம், தமிழ்நாடு. **கடன் நிலுவைத் தொகை : 29.05.2026 வரையில் ரூ.2,40,53,972.10 மற்றும் வட்டி, ஏனைய கட்டணங்கள் சேர்த்து. கேப்பு அறிவிப்பு தேதி : 06.07.2022. சுவாதீனம் எடுக்கப்பட்ட தேதி : 16.09.2025. சொத்து விபரம் : சர்வே எண்.336 :** பைசுஹள்ளி கிராமம், காரிமங்கலம் தாலுக்கா, தர்மபுரி ஜாயிண்ட் 2 சார்பதிவு மாவட்டம், தர்மபுரி, புதிய விஸ்தீரணம் ஹெக்டேர் 2.61.0 மதிப்பீடு ரூ. 7.25 np (ஏக்கர் 6.45 சென்ட்) இதில் **தாக்கு எண்.1 :** ஏக்கர் 0.58.50 சென்ட் (அல்லது) 25506 சதுரடி விஸ்தீரணம். எல்லைகள் : கிழக்கு : MM கோபி அவர்களின் நிலம், மேற்கு : 30 அடி சாலை, வடக்கு : சென்ன கிருஷ்ணன் மற்றும் சுபாஷினி ஆகியோருக்கு சொந்தமான சர்வே எண்.329, தெற்கு : MM கோபி அவர்களின் நிலம். **தாக்கு எண்.2 :** ஹெக்டேர் 0.58.50 சென்ட் அல்லது 25506 சதுரடி விஸ்தீரணம். எல்லைகள் : கிழக்கு : MM கோபி அவர்களின் நிலம், மேற்கு : 30 அடி சாலை, வடக்கு : MM கோபி அவர்களின் நிலம், தெற்கு : MM மகேந்திரன் அவர்களின் நிலம். **சர்வே எண். 114/1 :** பூமாண்டஹள்ளி கிராமம், காரிமங்கலம் தாலுக்கா, தர்மபுரி ஜாயிண்ட் 2 சார்பதிவு மாவட்டம் மற்றும் தர்மபுரி பதிவு மாவட்டம், மேலும் பூமாண்டஹள்ளி கிராம பஞ்சாயத்து மற்றும் காரிமங்கலம் ஒன்றிய கவுன்சிலுடன் இணைக்கப்பட்டுள்ளது. **அயிட்டம் எண். 1 :** புஞ்சை விஸ்தீரணம் ஹெக்டேர் 0.20.00 மதிப்பீடு ரூ.0.12 np (ஏக்கர் 0.49 சென்ட்). **சர்வே எண். 114/2 : அயிட்டம் எண். 2:** புஞ்சை விஸ்தீரணம் ஹெக்டேர் 0.62.0 மதிப்பீடு ரூ.0.38 np (ஏக்கர் 1.53 சென்ட்) அயிட்டம் எண் 1 மற்றும் 2 சேர்ந்து மொத்த பரப்பளவு ஏக்கர் 2.02 சென்ட் இதில் ஏக்கர் 0.50 சென்ட் அல்லது 2024 சதுர மீட்டர் அல்லது ஹெக்டேர் 0.20.24 விஸ்தீரணம். எல்லைகள் : கிழக்கு : சிலம்பரசன் அவர்களின் நிலம், மேற்கு : பூங்காவனம் மற்றும் ஏனையோருக்கு சொந்தமான நிலம் மற்றும் கேசவன் அவர்களின் நிலம், வடக்கு : பஞ்சாயத்து தார் சாலை, தெற்கு : அர்ஜுனன் அவர்களின் நிலம். **இந்த சொத்து திரு.M.M.கோபி, த/பெ.M.K.மாதைய்யா செட்டி அவர்களுக்கு சொந்தமானதாகும்: காப்பு விலை : ரூ.76,05,000.00/-. முன்வைப்புத் தொகை : ரூ.7,60,500/-. ஏலம் உயர்த்திக்கோரும் தொகை : ரூ.1,00,000/-. . ஏலம் நடைபெறும் தேதி : 17.06.2026. ஏலம் நடைபெறும் நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை 10 நிமிட கால நீட்டிப்புடன் .** சொத்தினை பார்வையிடும் தேதி : **அனைத்து வேலை நாட்களிலும் 11.06.2026 முதல் 15.06.2026 தேதி வரையில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில் கிளை மேலாளரின் முன் அனுமதி பெற்று பார்வையிடலாம். முன்வைப்புத் தொகை செலுத்த கடைசி தேதி : 17.06.2026 மதியம் 1.00 மணி வரை. சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஓசூர் கிளை, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009**

நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் : 1. ஏல விற்பனை ஆன்லைன் மின்னணு ஏலம் / ஏலம் கோருதல் என்ற முறையில் https://baanknet.com என்ற இணையதளத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் (ஏலம் முடிவுக்கு வரும் வரையில் 10 நிமிடம் கால நீட்டிப்புடன்) நடைபெறும். **2.** ஏல விண்ணப்பங்களை ஆன்லைன் முறையில் **17.06.2026,** மதியம் **1.00** மணி அளவிலோ அல்லது அதற்கு முன்பாகவோ சமர்ப்பிக்க வேண்டும். **3.**மின்னணு ஏல விற்பனையானது **"எப்படி எங்கு உள்ளனவோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் நடைபெறும். **4.** விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்னணு ஏல நடவடிக்கைகளில் கலந்து கொள்ளுதல் மற்றும் ஏல விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முன்பாக https://baanknet.com என்ற இணையதளத்திற்கு சென்று முழு விபரங்களுடன் கூடிய நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை அறிந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். **5.** வெற்றிபெற்ற ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர், வருமான வரிச் சட்டம் 1961–ன் உட்பிரிவு 194 IAன் பிரகாரம் ரூ.50.00 லட்சம் மற்றும் அதற்கு மேலான மதிப்பினை உடைய அசையாச் சொத்துக்களின் விற்பனை நடைமுறைகளில் 1% TDS தொகையினை செலுத்த வேண்டும். இத்தொகையினை படிவம் 26QB ல் சலான் (Challan) பூர்த்தி செய்து செலுத்தியதன் பின்னர் அதற்கான TDS சான்றிதழின் அசல் இரசீதினை வங்கியில் சமர்ப்பிக்க வேண்டும். **6.** மேலும் சொத்து தொடர்பான விபரங்களை அறிய **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஓசூர், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி / முதன்மை மேலாளர் : Mob No : 8489903009, முதன்மை மேலாளர் (RO) : Mob No : 8489903057, சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா, மண்டல அலுவலகம், கோயம்புத்தூர், மின்னஞ்சல் முகவரி :recvcoimro@centralbank.co.in,** அவர்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். ஏலதாரர் மேற்கண்ட இணையதளத்தில் பதிவு செய்து கொண்ட பின்னர், விருப்பமுள்ள ஏலதாரர் / சொத்தினை வாங்குபவர் பின்வரும் ஆவணங்களை ஏல விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் கடைசி தேதிக்கு முன்பாக இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். 1) NEFT/RTGS சலான் ஆகியவற்றின் நகல், 2) PAN கார்டு நகல், 3) அடையாளச் சான்று (KYC) சுய சான்றளிக்கப்பட்ட வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / பாஸ்போர்ட், 4) முகவரிச் சான்று, மேற்கண்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்யாவிடில் ஏல விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை அறியவும்.

தேதி : 29.05.2026
இடம் : ஓசூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா

சுவாதீன அறிவிப்பு

இப்பவும், இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் கண்ட அறக்கட்டளையின் அறங்காவலர் என்ற தகுதியில் செயல்படும் "அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்" ("ஆர்சில்") ன் அதிகாரப்பூர்வ அலுவலர், பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் நிதிச்சொத்து அமலாக்கம் சட்டம் 2002 (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) (மேற்சொன்ன "சட்டம்") ன் கீழும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) – உடன் படிக்க – பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ("மேற்சொன்ன விதிகள்") ன் விதி 3 ன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தியும், கோரிக்கை அறிவிப்பை அனுப்பி, கடன்தாரர்கள்,